RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI:10.34256/irjt22s120

# தமிழ்ப் பெண் படைப்பாளர்களின் பார்வையில் பெண்ணியம்

வீ. இராஜேந்திரன் [அ, *], அ. பாக்கியமுத்து [ஆ]

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிருத்துவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்-629001 ,தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி, பாபநாசம், திருநெல்வேலி-627425, தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in the view of tamil women writers

V. Rajendran [a, *], A. Packiamuthu [b]

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), Nagarcoil-629001, Tamil Nadu, India.

[b] Department of Tamil, Thiruvalluvar College, Papanasam, Thirunelveli-627425, Tamil Nadu, India.

* Corresponding Author: srisaiuma23042012@gmail.com

Received: 18-03-2021
Revised: 11-01-2022
Accepted: 18-01-2022
Published: 25-02-2022

Check for updates

**ABSTRACT**

Feminism is a movement which intends to solve the problems of women in all spheres of life. Through feminism significant change can be brought about in politics, culture, economy, spirituality etc at world level. Feminism does not mean ensuring the rights of women. It means readically changing the society for the betterment of all the human beings. Women are very much oppressed in society, office and family. Mutual understanding of men and women in all dimensions is indispensable to foil the insult and injustice meted out to the women fold to a significant extent. Feminism refers to the struggle of women for equal rights in a peaceful way. Bama's first noval Karukku is the first Dalit Novel in Tamil literature. Women endowed with education along can come out from the darkness of ignorance to the radiant light of radical thoughts. Only such women can ignite the spark of reformation in the women oppressed society. This is the consensus of the Tamil women writers.

**Keywords:** Feminism, Equal Rights, Radical Change, Reformation

## முன்னுரை

பெண்ணியம் என்பது பெண்களைத் தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புகள் மற்றும் சமத்துவமின்மையைக் எதிர்க்கும் கவனப்படுத்தும் சமூக, கலாச்சார, அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பாகும். ஆண், பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப்படுவதுண்டு. பால் அடையாளங்களான ஆண்-பெண் போன்றவை வெறுமனே சமூகத்தால் கட்டமைக்கப்பட்டவையே என்ற வாதங்களும் உள்ளன. பெண் படைப்பாளர்களின் பார்வையில் பெண்ணியம் என்ற கட்டுரையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்ணியம் - சொல்விளக்கம்

Feminism என்னும் ஆங்கில சொல் Femina எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்நிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக்கொள்கை ஆகிய சொற்களால்

அழைக்கப்பட்டு வருகிறது. பெண்ணியம் என்ற சொல் நடப்பில் நிலை பெற்று விட்டது என்பதாலும், கருத்துக் குழப்பத்திற்கு இடம் தராமல் தெளிவாக உள்ளதாலும் பெமினிசம் என்கிற ஆங்கிலச் சொல்லின் தமிழ் இணைச் சொல்லாக இது வழங்கப்பட்டு வருகிறது. பெமினிசம் என்பதற்கு பெண்ணியம் என்பதே பொருத்தமான கலைச் சொல்லாகும். தற்காலப் பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை இன சமூக, கலாச்சார, மத எல்லைகளைக் கடக்கும் அடிப்படை இயக்கமாகக் கருதுகின்றனர்.

## பெண்ணியம் - கருத்துவிளக்கம்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்கலையும் புரிந்து கொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும். அதன்மூலம் உலகளாவில் அரசியல் பண்பாடு, பொருளாதாரம், ஆன்மீகம் ஆகியவற்றில் நல்ல மாற்றத்தை உருவாக்கிட முடியும். சார்லட்பன்ஸ் என்பவர் "பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்" என்று எடுத்துரைப்பார் (Dharmaraj & Epijems, 2018). தெற்காசிய நாடுகள் பெண்கள் சமூகம், அலுவலகம், குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது பற்றிய விழிப்புணர்ச்சியையும் அத்தகைய இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயல்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது.

## பெண்ணியமும் அதன் நோக்குகளும்

பெண்ணியமானது பல்வேறு குறிக்கோளை உள்ளடக்கியதாக உள்ளது (Thanya,1996). அவையாவன

- பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்க போராடுதல்
- ஆண், பெண் இருபாலரும் சமத்துவ உரிமைகளை ஒருங்கிணைந்து நிலை நாட்டுதல்
- பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்து வகை வாழ்க்கை முறைகளுக்கும், பணிகளுக்கும் உரிமையுடைவர்களாக இருத்தல்
- பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்துவனவற்றையும் அவர்களின் முன்னேற்றத்திற்கு கேடுவிளைவிப்பனவற்றையும் நீக்குதல்
- பெண்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை ஒருங்கிணைத்து, இயக்கமாக்கி உரிமைகளுக்காகப் போராடச்செய்தல்
- பெண்களுக்குப் பொருளதாராச்சுதந்திரத்தை நிலை நாட்டுதல்
- ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு அதனை அறவே களைதல்
- பெண்களின் மீதான அனைத்துவகை ஒடுக்குமுறைகளையும் ஆராய்ந்து அவற்றைப் போக்குவதற்கான தீர்வுகள் மற்றும் விடுதலைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல்
- பெண்களின் நலனைப் போற்றுதலும் அதனை அடைதலும் அடைந்தவற்றைக் காத்தலும்

## பெண்ணியத்தின் வளர்ச்சி நிலை

தொடக்கக்காலத்தில் மனிதகுலம் தாய்வழிச்சமூகமாக இருந்துள்ளது. பெண்ணே குடும்பத்தை வழி நடத்தித் தலைமைப் பொறுப்பில் இருந்திருக்கின்றாள். இவை மானுடவியல் ஆய்வாளர்களின் கருத்துக்களாக உள்ளன. பின்னர் பல்வேறு சமூக மாற்றத்தால் தாய்வழிச்சமூகம் வீழ்ச்சி கண்டது. நாடெங்கிலும் பெண் கொடுமைகளுக்கு ஆட்பட்டாள். அந்தந்த நாட்டின் சூழலுக்கேற்ப பெண் சமுதாயம் பல கொடுமைகளை அனுபவித்தது. இவ்வகையான பெண்ணினக் கொடுமைகளுக்கு எதிராக,

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உலகெங்கிலும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. 1885 ஆம் ஆண்டு காசிம் அமீன் என்பவர் புதுமைப்பெண் (The New Women) என்றொரு நூலை எழுதினார். இந்நூல் மனித சமுதாயத்தில் ஒரு வித விழிப்புணர்வைத் தோற்றுவித்தது. பிரான்சு நாட்டைச் சேர்ந்த சிமோண்டி பேவர் இரண்டாவது பாலினம் (The Second sex 1949) என்ற நூலை எழுதினார் (De Beauvoir, 2014). இந்த நூலை முன்னோடியாகக் கொண்டு, பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன்வைக்கப்பட்டது. 1871 இல் பிரான்சில் பெமினிசம் என்றச் சொல் அறிமுகப்படுத்தப்படுகிறது. 1872 இல் அலெக்சாண்டர் டூமஸ் பில்ஸ் என்ற பிரெஞ்சு எழுத்தாளர் பெண்கள் ஆண்களால் வழிநடத்தப்படுகிறார்கள் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். 1840 இல் பெண்களின் உரிமைக்கான இயக்கம் தொடங்கப்பட்டது. இந்தியாவில் பெண்ணியம் என்ற சொல் 1960க்குப் பிறகே அதிகமாகப் பேசப்பட்டது (Parimalam, 2008).

## பெண்ணியக் கருத்தாக்க நிலைகள்

பெண்ணியம் ஆணுக்கு எதிரானது அன்று. ஆணாதிக்கத்தை எதிர்ப்பதாகும். பெண்ணியத்தின் தளம் விரிந்து பரந்தது. பெண்ணியவாதிகளால் குறிப்பிடப்பெறும் கருத்தாக்கங்கள் பலவுண்டு. இவர்கள் உடல், உளவியல் அடிப்படையில் பெண்ணின் சமூகப் பொருளாதார நிலையை அறிந்து கொள்ளப் பயன்படும் பெண்ணியக் கருத்தாக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர்.

- ❖ பண்பாட்டுக் கட்டமைப்பு
- ❖ தாய் வழிச் சமூகம்
- ❖ தந்தை வழிச்சமூகம்
- ❖ பாலியல் பணி வேறுபாடு
- ❖ பாலியல் அரசியல்
- ❖ அதிகாரம் விடுதலை.

## இந்தியாவில் பெண்ணிய வளர்ச்சி நிலை

இந்தியத் தேசியமும் இந்தியப் பெண்ணியமும் ஓரே காலகட்டத்தில் கட்டமைக்கப்பட்டது. மேலை நாட்டுப் பெண்ணியத்திற்கு எதிராக இந்திய பெண்ணியம் உருவாக்கப்பட்டது. பெண்மையின் வலிமையைச் சக்தியை அடிப்படையாகக் கொண்டே இந்திய நாகரிகம் எழுதப்பட்டிருக்கிறது என்று சரோஜினிதேவி போன்றவர்கள் குரல் கொடுத்தனர். இந்தப் பின்னனியில் தான் பெண் தெய்வமாக்கப்பட்டாள். இக்கருத்துருவாக்கங்கள் இந்திய பெண்ணியத்தின் அடையாளமாக முதன்மைப்படுத்தப்பட்டன. இந்தியப் பெண்ணியமானது இந்திய விடுதலை போராட்ட வரலாற்றுடன் இணைந்தே வளர்த்தெடுக்கப்பட்டது. சுவர்ணகுமாரிதேவி தலைமையில் 1886-இல் பெண்கள் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது, அதன்பின் 1917 மே 8 ஆம் நாள் சென்னையில் அன்னிபெசண்ட் தலைமையில் இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு என்கிற அமைப்பு உருவானது.

## சமூகதாக்கங்கள்

பெண்ணிய இயக்கங்களால் மேற்கத்திய நாடுகளில் பெண்களுக்கு ஓட்டுரிமை, தேர்தலில் போட்டியிடும் அனுமதி, குழந்தை பெற்றுக்கொள்வதில் தன்னுரிமை, சொத்துரிமை சம்பளத்தில் பாலியல் பாகுபாடின்மை போன்றவற்றை பெற முடிந்தது. இந்தியச் சூழலில் ஓட்டுரிமையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையும் பெண்ணிய பார்வை கொண்ட நேரு, அம்பேத்கார் போன்றோர் இருந்ததால் எளிதாக பெண்களுக்கு கிடைக்கப் பெற்றன. சொத்துரிமை பெயரளவில் சட்டத்தில் உள்ளன (Saraswathi, 1999).

## தமிழ்ச்சூழலில் பெண்ணியம்

தமிழ்ச்சூழலில் பெண்ணியம் இலக்கியம், அரசியல் ஆகிய இரு தளங்களில் பரவலாக செயற்பாட்டில் இருக்கிறது. பெண்நிலைப் பார்வை குறித்த பிரக்ஞையும் தேவையும் அதிகரித்து வரும் வளர் நிலையில் ஏராளமான பெண்கள் பங்கு பெற்றும் இலக்கிய இயக்கங்களும் அரசியல் இயக்கங்களும் தமிழ்ச் சூழ்லில் உருவாகி வருகின்றன. தமிழ்ச் சூழலில் பெண்ணிய வகைபாடுகள் மற்றும் இன்றைய தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் அட்டவணை 1 இல் கொடுக்கப்பட்டுள்ளது

**அட்டவணை** 1. இன்றைய தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்

| தமிழ்ச் சூழலில் பெண்ணிய வகைபாடுகள் | இன்றைய தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் |
|---|---|
| மார்க்சியப் பெண்ணியம் | அம்பை |
| தலித் பெண்ணியம் | உமாமகேஸ்வரி |
| தேசியப் பெண்ணியம் | குட்டி ரேவதி |
| இந்துமதப் பெண்ணியம் | சந்திரவதனா |
| நாத்தீகப் பெண்ணியம் | சல்மா |
| மரபுசார்பெண்ணியம் | சித்தி ஜுனைதா பேகம் |
| தீவிரப் பெண்ணியம் | சுகிர்தராணி |
| பின்னை தலித்தியம் பெண்ணியம் | சு. தமிழ்ச் செல்வி |
| | சே. கல்பனா |
| | தமிழ் நதி |
| | தி. பரமேசுவரி |
| | பாமா |
| | லீனா மணிமேகலை |
| | ஜெயந்திசங்கர் |
| | ச. விஜயலட்சுமி |

ச. விஜயலட்சுமி, தமிழ் புதுக்கவிதை உலகில் தொடர்ந்து எழுதி வருபவர். "பெருவெளிப்பெண்" என்னும் முதல் கவிதைத்தொகுப்பை 2007-இல் வெளியிட்டுள்ளார். "தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை" எனும் ஆய்வு நூல் 2002 -இல் வெளிவந்துள்ளது. "பெண்ணெழுத்து களமும் அரசியலும்" எனும் நூல் 2011 -இல் வெளிவந்துள்ளது. இரண்டாம் கவிதைத் தொகுப்பு "எல்லா மாலைகளிலும் எரியுமொரு குடிசை" 2011 -இல் வெளிவந்துள்ளது. மூன்றாம் கவிதைத் தொகுப்பு "என் வனதேவதை" 2016 -இல் வெளிவந்துள்ளது. நான்காம் கவிதைத்தொகுப்பு "பேரன்பிங்கனதி" 2018 -இல் வெளிவந்துள்ளது. "லண்டாய்" என்னும் இவரின் மொழிப்பெயர்ப்பு நூல் 2014 -இல் ஆஃப்கான் பெண்களின் வாய்மொழிப் பாடல்களையும் நவீன கவிதைகளையும் உள்ளடக்கியது. பாமா அவர்களின் ஒரு சிறந்த பெண்படைப்பாளர் அவர் 1958-இல் பிறந்தவர். தலித் இலக்கியம் படைக்கும் குறிப்பிடத்தக்க முன்னணி எழுத்தார் ஆவார். இவர் 1992-இல் எழுதிய தன்வரலாற்றுக் கூறுகளுடன் எழுதிய கருக்கு என்னும் புதினம் புகழ் பெற்றது. அதில் இவர் தலித் மக்கள் மொழியைப் பயன்படுத்தி எழுதியது புதிய பாதை வகுத்து என கருதப்படுகின்றன. இவரது கருக்கு புதினத்தை லட்சுமி ஹோம்ஸ்ட்ராம் ஆங்கிலத்தில் மொழி மொழிபெயர்த்துள்ளார். 2000 ஆம் ஆண்டின் 'கிராஸ் வேர்ட்புக்' விருதைப் பெற்றிருக்கிறார். இவரின் கருக்கு (1992), சங்கதி (1994), ஆகிய இரு நாவல்களும் மிகச் சிறந்த தலித்திய நாவல்களாகும். இவரின் முதல் நாவலான கருக்கு தமிழின் முதல் தலித் இலக்கியத் தன்வரலாற்று நாவல் என அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்பட்ட ஒன்று. ஒரு பெண்ணாக, கிறித்தவப் பெண் துறவியாகத் தென் மாவட்ட கிராமம் ஒன்றில் தான் பட்ட அனுபவங்களே இவர் எழுதிய தன் வரலாற்று நாவலான கருக்கு ஆகும்.

'கருக்கு' நாவலின் முன்னுரையிலேயே பாமா கூறுகிறார்

"வாழ்க்கையின் பல நிலைகளில்

பனங்கருக்குப் போல என்னை அறுத்து
ரணமாக்கிய நிகழ்வுகள், என்னை
அறியாமையில் ஆழ்த்தி முடக்கிப்
போட்டு மூச்சுதிணறவைத்த அதீத
சமுதாய அமைப்புகள், இவற்றை
உடைத்தெறிந்து அறத்தொழித்து
விடுதலை பெற வேண்டும் என்று
எனக்குள் ஏழுந்த சுதந்திரப்
பிரளயங்கள். இவை சிதறடிக்கப்பட்டு
சின்னாபின்னமாக்கப்பட்ட
சந்தர்ப்பங்கலில் எனக்குள்
கொப்பளித்துச் சிதறிய குருதி
வெள்ளங்கள் எல்லாம் சேர்ந்து தான்
இப்புத்தகத்தின் கரு"

தலித் எழுத்தாளரான பாமாவின் முதல் நாவல் கருக்கு. தலித் மீதான சமூகத்தின் பார்வையை தனது சொந்த அனுபவங்கள் வழி பதிவுச் செய்கிறார். மாற்று சாதியினரிடம் இருக்கும் தீண்டாமை மனோபாவம், கிராம நிகழ்ச்சிகளிலும், ஊர் திருவிழாக்களிலும் பங்கு கொள்ள முடியாமல், தனித்து விடப்பட்ட சோகங்கள், அக்கால கட்டத்தில் பள்ளி கல்லூரிகளில் தலித் மாணவர்கள் எதிர் நோக்கிய அவமானங்கள் என ரணங்களின் வேதனையாய் நீள்கிறது இப்பதிவு. ஜாதியை முன்வைத்து எதிர் நோக்கிய தடைகளையும் அவமானங்களையும் தாண்டி பள்ளி மற்றும் கல்லூரியில் தேர்ச்சி பெற்று தன் சமூகத்து குழந்தைகளுக்கு சேவை செய்து பணியாற்றிய அனுபவங்களை கூறும் இடங்கள் முக்கியமானவை. சுயவரலாறு அல்லது தன் கதை கூறுதல் என்பது நாவலின் ஒரு வடிவம் தலித் மக்களின் வாழ்வை சொல்லவும் ஏற்ற தொணி சுய வரலாற்று முறையே என்று கருதுகிறேன். சுயவரலாறு நிஜத்தை முகத்துக்கு நேர்நின்று பேசுகிறது.

## முடிவுரை

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு நிலைகள் இருக்கக் கூடாது என்பது இக்கட்டுரையின் முதற்குறிக்கோள் ஆகும். ஒரு படைப்பாளர் தன் படைப்பின் மூலம் சமூகத்தில் இருக்கும் சிக்கல்களையும், பிரச்சனைகளையும் வெளிக்கொணர முடியும் என்று கருதுகின்றனர். சமூகத்தில் இருக்கும் பெண்கள் கல்வியறிவு பெற்றால் மட்டுமே தனது சுய சிந்தனைகள் மூலம் அறியாமையில் இருந்து வெளிக்கொணர முடியும் என்று பெண் படைப்பாளர்களின் கருத்தாகும். சமூகத்தில் பெண்களை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வது கல்வி மட்டுமே ஆகும்.

## References

De Beauvoir, S., (2014) The Second Sex, Random House, United Kingdom.

Dharmaraj, J., Epijems, T., (2018) Penniyal, 3rd edition, Tensy Publications, Sivakasi, India.

Parimalam, (2008) Penniya Parvai, Tamizhini Pathippagam, Chennai, India.

Saraswathi, (1999) Pennum prachanaigalum, Kadalangudi Publications, Chennai, India.

Thanya. K., (1996) Penniya nokku, Kumaran Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License